OS: 509/2018

Date:02.09.2025

பெயர் : மணி **(**பி**.**வா**.**சா**.1)**

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:-</u>

1. வழக்கு சொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்டு வாதிகள் அனுபவத்தில் இருந்துவந்து அரசாங்கத்திற்கு கந்தாயமும் செலுத்தி வருகிறார் என்பதை காட்ட வா.சா.ஆ.5 முதல் 10 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் (இப்போது பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் இந்த கேள்வி கேட்கமுடியாது என்றும், இது Hypothetical Question என்று ஆட்சேபித்ததை கேட்ட பின்னர் பிரதிவாதி இது பொய்யான ஆவணம் என்று கூறினார்.)

2. எனது சொத்து தருமபுரி பிரதான சாலையை ஒட்டி கிழக்கே உள்ளது என்றால் சரியல்ல, இரண்டு புறமும் இருக்கிறது. தருமபுரி மெயின் ரோட்டை ஒட்டி இல்லையா என்றால் மெயின் ரோட்டை பார்த்தவாறு இருக்கிறது. 3, 4 பிரதிவாதிகளான சந்திரசேகரன், நவனீதஜெயகுமார் ஆகியோர்கள் மருத்துவமனையும், தருமபுரி மெயின் ரோட்டிற்கு கிழக்கே உள்ளது என்றால் ஆமாம். மோகன்ராஜ், லட்சுமி, பாபு ஆகியோர்கள் ஓ.கே.ஏகாம்பரத்திடமிருந்து மனை நிலத்தை கிரையம் வாங்கினார்கள் என்றால் மோகன்ராஜ், லட்சுமி வாங்கியது தெரியும், பாபு யாரிடம் வாங்கினார் என்று தெரியவில்லை.

3. நான், ஓ.கே.ஏகாம்பரம் வகையாறாவிடமிருந்து பி.வா.சா.ஆ.9 ல் உள்ள சொத்தை கிரையம் வாங்கினேனா என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் தென்புறம் 15 அடி பொது தடவழி இருப்பதாக செக்குபந்தியில் குறிப்பிட்டு காட்டப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். கோவில் இடம் என்று இவர்கள் சொல்வதுதான் எங்களுக்கு பாத்தியப்பட்ட தடபாத்தியம் ஆகும். அதை தான் காட்டிவிற்றிருக்கிறார்கள். எனது நிலத்திற்கு பின்புறம் ஓமலூர் பஞ்சாயத்து போர்டுக்கு பாத்தியப்பட்ட நிலம் இருக்கிறது என்றால் ஆமாம். ஓமலூருக்கு காவேரி ஆற்று தண்ணீர் வரும் வரை பஞ்சாயத்து போர்ட் இடத்தில் உள்ள கிணற்றில்தான் பொதுமக்கள் பொதுபாதை வழியாக வந்து தண்ணீர் எடுத்து சென்றார்கள்.

4. என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆவணம் 3 ல் சர்வே எண் 81/5 பஞ்சாயத்து

போர்ட்டுக்கு சேர்ந்த நிலம் என்றால் சர்வே எண் தெரியாது, என் கடைக்கு பின்னால் தான் அந்த பஞ்சாயத்து போர்டு நிலம் இருக்கிறது, அதில் தான் கிணறும் இருக்கிறது. அந்த பஞ்சாயத்து போர்ட் நிலத்தை தாண்டிதான் பி.வா.சா.ஆ.9ல் கண்ட நிலத்தை கிரையம் பெற்றேன் என்றால் இல்லை. அதற்கு பஞ்சாயத்து போர்ட் நிலத்திற்கு இணையாகதான் நிலம் வாங்கினேன். எனது நிலத்திற்கும் பஞ்சாயத்து நிலத்திற்கும் எவ்வளவு இடைவெளி என்று தெரியவில்லை. நி.ம.சா.ஆ.3ல் 16 மீட்டர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் இருக்கலாம்.

5. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையிலும், பிரமாண பத்திரிக்கையிலும், பிரதிவாதிகளான எங்களுடைய மனை நிலங்களுக்கு வழக்கு சொத்தை தவிர வேறு வழி இல்லை என்று வேண்டுமென்றே பொய் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. இருப்பதை தான் சொல்கிறேன். எனது பத்திரத்தில் தடம் குறிப்பிட்டு எழுதப்பட்டிருக்கிறது அதை தான் கேட்கிறேன். மற்றவர்களுக்கு பாத்தியப்பட்ட நிலத்தை தடம் என்று குறிப்பிட்டு வாங்கியதை மட்டும் அதில் உங்களுக்கு உரிமை வராது என்றால் சரியல்ல. அது மற்றவர்களுக்கு பாத்தியப்பட்டதல்ல, எங்களுக்கு பாத்தியப்பட்ட தடம் தான்.

6. ஒ.கே.ஏகாம்பரம் வகையாறாக்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை வீட்டு மனைகளாக பிரித்து விற்றிருக்கிறார்கள் என்றால் ஆமாம். புது தெருவையும், பேருந்து நிறுத்தத்தையும் இணைக்கும்படி அவருடைய நிலத்தில் 25-35 அடி அகலத்தில் மனைப்பிரிவு ரோடு அமைத்திருக்கிறார் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் உள்ள இடத்திற்கு தென்புறமாக உள்ள ரோடு 25-35 அடி அகலத்தில் உள்ள மனைப்பிரிவு சாலையை இணைக்கிறது என்றால் ஆமாம் மற்றும் தருமபுரி ரோட்டையும் இணைக்கிறது.

7. எனது பத்திரமான பி.வா.சா.ஆ.9ல் கண்ட ரோட்டின் வழியாக 25-35 அடி ரோட்டின் சென்று 85 மீட்டரில் புதுதெருவை சேரலாம் என்றால் போகலாம், ஆனால் இடைவெளி 85 மீட்டரா என்பது தெரியாது. 25-35 அடி லேஅவுட் ரோட்டில் இருந்து 100 மீட்டர் சென்றால் புதிய பேருந்து நிறுத்தத்தை அடையளாம் என்றால் அடையளாம் மீட்டர் கணக்கு தெரியவில்லை. வடபுறம் சென்றால் புதுதெரு, இடபுறம் சென்றால் பேருந்து நிறுத்தம் ஆகும்.

8. இ.ம.எண்.494/2007 மனுவை இந்த வழக்கை தாக்கல் செய்வதற்காக தாக்கல் செய்து அனுமதி பெற்றிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. எனது பதிலுரையில் 6வது பாராவில் ஓமலூர் உரிமையியல் நீதிமன்றத்தின் அ.வ.எண்.252/2007 வழக்கின் எதிர் தாக்குதலுக்காக வாதி கோவில் தர்ம கர்த்தாக்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக சொல்லிவிட்டு எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் அ.வ.எண்.252/2007 என்ற வழக்கை முறியடிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்திற்காக இந்த வழக்கை காலம் கடந்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

9. அ.வ.எண்.252/2007 வழக்கை பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து 28.09.2007ம் தேதி தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் தேதி நினைவில்லை. இந்த வழக்கை 14.11.2007ம் தேதியில் வாதி தாக்கல் செய்திருக்கிறார் என்றால் தேதி நினைவில்லை. இந்த வழக்கானது அ.வ.எண்.252/2007 வழக்கில் வழக்கு சொத்து ரோடு என்று சொன்னதால் தான் கோவில் தர்ம கர்த்தாக்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வழக்கு நாங்களாக தாக்கல் செய்யவில்லை, வழக்கறிஞர் அறிவிப்பு வந்ததால்தான் தாக்கல் செய்தோம்.

10. இந்த வழக்கானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனது எதிருரையில் 6வது பாராவில் ஓமலூர் நீதிமன்றத்தில் அ.வ.எண்.257/2007 வழக்கை வழக்கு சொத்தை பொது ரோடு என்று விளம்புகை செய்யசொல்லி பரிகாரம் கேட்டிருப்பதாக சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். எனது பதிலுரையில் 7வது பாராவில் இந்த வழக்கில் டவுன் பஞ்சாயத்து போர்ட்டை சேர்க்கவில்லை என்று சொல்லியிருக்கிறேனா என்றால் நினைவில்லை. நான் தாக்கல் செய்திருக்கும் வழக்கில் ஓமலூர் டவுன் பஞ்சாயத்து போர்ட்டை ஒரு தரப்பினராக சேர்த்திருக்கிறேன் என்றால் சேர்த்திருக்கலாம். அந்த வழக்கில் அவர் 6ம் பிரதிவாதி என்றால் நினைவில்லை.

11. அந்த வழக்கின் 6ம் பிரதிவாதி வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி, பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் நினைவில்லை. என் வழக்கறிஞருக்குதான் தெரியும். வா.சா.ஆ.17 ஆவணம் 6ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரை என்றாலும் அதில் 5வது பாராவில் தாவா பாதை குறித்து இந்த பிரதிவாதி அலுவலகத்தில் எந்தவொரு ஆவணங்களும் பேணபடவும் இல்லை அதேபோல் எந்த ஆவணங்களும்

நடைமுறையிலும் இல்லை, தற்போது எந்தவொரு பாதையும் தாவாவில் சொல்லியுள்ளது போல பேரூராட்சி கட்டுப்பாட்டிலோ அல்லது பேரூராட்சி மூலமே பராமரிக்கப்படுவதும் இல்லை, செயல்பாட்டிலும் இல்லை என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்கள் என்றால் அது பொய், எனக்கு அதுபற்றி தெரியவில்லை.

12. மேற்படி எதிருரையுன் 6வது பாராவில் தாவா சொத்து (அ.வ.எண்.257/2007) கண்டுள்ள விவரங்கள் பொய்யானவை என்று சொல்லியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. அதுபற்றி எனக்கு தெரியவில்லை. எனது பதிலுரையின் 8வது பாராவில் அ.வ.எண்.257/2007 என்ற வழக்கில் இடைகால உறுத்துகட்டளை மனு 706/2007ல் முதல் நோக்கு வழக்கு இல்லை என்பதால் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு வழங்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

13. இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் பதிலுரையில் 3வது பாராவில் வழக்கு கோவில் தேவாங்க சமுதாயத்தினருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியிருப்பது எனக்கு தெரியும் என்றால் வாதிகள் அப்படி தான் சொல்கிறார்கள். நாங்கள் அப்படி இல்லை என்கிறோம் அதுதான் வழக்கே. வாதி கோவில் 5க்கு மேற்படாத அரங்காவலர்களை நியமித்து நிர்வாகிக்க வேண்டும் என்று இந்து அரநிலையத்துறை ஒரு உத்தரவு பிறப்பித்த விவரம் எனக்கு தெரியும் என்றால் இல்லை, வழக்கறிஞருக்குதான் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வழக்கிலும் கூட இந்த 5 நபர்களை தர்ம கர்த்தாவாக காட்டியிருக்கிறோம் என்றால் நீங்கள் நோட்டீஸில் சொன்னதால் நாங்கள் காட்டியிருக்கிறோம்.

14. கூடுதல் பதிலுரையின் 4வது பாராவில் எனது நிலத்திற்கு கிழபுறம் உள்ள கிணற்றில் பொதுமக்கள் தண்ணீர் எடுத்து பயன்படுத்துவதாக குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். கிணற்றுக்கு போக பொது மக்களுக்கு வேறு வழி இல்லாததால் அவ்வாறு சொல்லியிருக்கிறேன். நீதிமன்ற ஆணையர் வந்து நிலத்தை பார்வையிட்டார் என்றால் ஆமாம். இருமுறை வந்தார்கள். ஆணையர் அறிக்கையில் நான் சொல்லும் கிணறு பாழடைந்த கிணறு குறிப்பிட்டு காட்டியிருக்கிறார் என்றால் அவர் வந்து பார்த்தபோது அப்படிதான் இருந்தது. மேட்டூரில் பவர் பிளாண்ட் போட்டு தண்ணீர் ஓமலூருக்கு வந்த பின்னர் அந்த கிணற்றை யாரும் பயன்படுத்துவதில்லை, அதற்கு முன்னர் ராட்டினம் போட்டுதான் பொதுமக்கள் தண்ணீர் எடுக்க அந்த பாதையை பயன்படுத்தினார்கள்.

15. நான் சொல்வது பொய் என்றாலும், அந்த பாதையை பொதுமக்கள் பயன்படுத்தவில்லை என்றாலும், பஞ்சாயத்து பாதையே இருக்கிறது என்றாலும், அதை தான் பொதுமக்கள் பயன்படுத்தினார்கள் என்றாலும் சரியல்ல. நான் சொல்லும் கழிவறை அங்கு இல்லை என்றாலும், புதுதெருவை ஒட்டினார் போல் உள்ளது என்றாலும் சரியல்ல. ஆரம்பத்தில் அங்கு ஆண்கள் கழிவறை இருந்தது, அதற்கும் அதுதான் பாதை தற்போது அந்த கழிவறை இல்லை. புதுதெருவை ஒட்டினார்போல் பெண்கள் கழிவறை இருந்தது தற்போதும் அது இருக்கிறது.

16. நான் சொல்வது போல ஆண்கள் கழிவறை அங்கு இல்லை என்றால் சரியல்ல. எனது பதிலுரையின் 4 வது பாராவில் வாதிகள் சொல்வது போல சொத்துக்கள் இல்லை என்று ஆணையர் சொன்னதாக நான் சொல்லியிருப்பது ஆணையர் அறிக்கையில் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எனக்கோ, மற்ற பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதோ இல்லை என்றால் சரிதான். நான் பொதுபாதை என்றுதான் வழக்காடுகிறேன். நான் பொது ரோடு என்று கேட்டு தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. நான் எனது முதல் விசாரணையில் அதுகுறித்து சொல்லிவிட்டு தற்போது வேண்டுமென்றே தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன். என்றால் சரியல்ல. வழக்கு சொத்து விவரம் சரியானது என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>

(ஒப்பம்/-T.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.